செ.வெ.எண்: 180 நாள்: 20.03.2021

**18004252735 என்ற கட்டணமில்லா எண்ணில் தேர்தல் நடத்தை விதிகள் மீறல் மற்றும் இதர தேர்தல் தொடர்பான புகார்கள் அளிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

தேர்தல் நடத்தை விதிகள் மீறல் மற்றும் இதர தேர்தல் தொடர்பான புகார்கள் அளிக்க **18004252735** எனும் கட்டணமில்லா தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்கள் 2021 எதிர்வரும் 06.04.2021 அன்று நடைபெறுவதை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் மாவட்டத்தில் முழுமையாக பின்பற்றப்படுவதை கண்காணிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் தேர்தல் நடத்தை விதிகள் மீறல் மற்றும் இதர தேர்தல் தொடர்பான புகார்கள் அளிக்க **18004252735** எனும் கட்டணமில்லா தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இதுதவிர தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு புறம்பாக தனிநபரோ அல்லது அரசியல் கட்சி பிரமுகர்களோ செயல்பட்டால், பொதுமக்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தங்கள் புகார்களை cVIGIL என்ற செல்போன் செயலி வாயிலாக தெரிவிக்கலாம்.

மேற்காணும் cVIGIL செயலியில் பொதுமக்கள் தங்கள் புகார்களை புகைப்படம் வாயிலாக, ஆடியோ வாயிலாக மற்றும் வீடியோ வாயிலாகவும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு cVIGIL செயலியில் தெரிவிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**